முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

## சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 14 திகதி முதல்
## சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 21 திகதி வரை
## (01.10.2023 ஞாயிறு முதல் 08.10.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தருமபலம் கொண்ட பாரதமே
   தயவு நிறைந்த தமிழகமே
   வருங்கால இந்தியா தமிழகத்தின்
   வாரநிகழ்வாக அரங்கன் கேட்க
2. கேட்கவே அகத்திய மகரிஷி யானும்
   கூறிடுவேன் சோபகிருது தரிவை திங்கள்
   திட்டமுடன் முன்னான்கீர் திகதிமேல் மூவேழு திகதிவரை
   தேசம் இந்தியா தமிழகத்தில் நடக்கும் நிகழ்வாக
3. நிகழ்வாக வருங்கால பலன்குறித்த
   நிலமதனில் ஆசிதனை உரைப்பேன்
   அகத்தியன் சொல்லாய் கேளும்
   ஆணவம் மதகலகம் செய்யும் படி
4. செய்யும்படி மேதகு ஆளுமைகள்
   சேவை மறந்து மத நிந்தனை
   செய்தால் சிறுமை கண்டுமே
   சிக்கலில் சான்றோர் நிந்தனை
5. நிந்தனை கண்டு மக்கள் தீர்ப்பாய்
   நிலமதனில் தேர்தலில் பின்னடைவு
   வந்துமே வாய்ப்பில்லா தவிப்பும்
   வாரிச் சுருட்டிய அனைத்தும் இழக்க நேரும்
6. நேருமைதனை காக்கா விடினும்
   நீதியை நேருமையை சீர்குலைக்கா
   தருமவழி நடந்தால் தான்
   தலைமைகள் தப்பும் களம் தொடரும்

7. தொடரவே மக்களை நோக்கி
தேச வளர்ச்சிக்கான தொரு
இடரிலா பல பணிச்சுமை இருக்க
ஏனப்பா இந்த கலக அரசியல் களம்
8. களம்விட்டு தயவை காட்டி
கட்டளையாகத் தந்த வாக்குறுதி
களப்பணி வேலை வாய்ப்புத்தனில்
கவனம் செலுத்தி மக்களின் வறுமை
9. வறுமை போக்கும் வழி கண்டாலே
வாழ்த்தி வணங்கி உலக தேசமே
பெருமை கொள்ள இந்தியா தமிழகம்
பெருநிலை கண்டடையுமப்பா
10. அப்பனே கலிகாலம் இது
ஆபத்து தரும் மதகலக தூண்டல் செய்யும்
தப்பான அரசியல் பார்வைத் தொடர்ந்தால்
தப்பிக்கா தலைமை வீழுமப்பா
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 14ம் நாள் 01.10.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 21ம் நாள் 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை வரைக்கான ஆசி நூல் :

தருமபலம் மிகுந்த பாரத தேசமே தயவு மிகுந்த தமிழகமே வருங்கால நிகழ்வாக ஆறுமுக அரங்க மகாதேசிகனார் அகத்திய மகரிஷி எம்மிடம் கேட்க அகத்திய மகரிஷி யானும் சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 14ம் நாள் 01.10.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 21ம் நாள் 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள ஆசி நூல்தனை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

மதக்கலகம் நாட்டினில் உண்டாகும் விதத்திலே ஆட்சியர்கள் தாங்கள் நாட்டைக் காக்க ஆட்சி செய்வதை மறந்து மத நல்லிணக்கமாக செயல்படாமல் மத நிந்தனைகளை தொடர்ந்து செய்து வந்தால் சிறுமை அடைவார்கள்.

சிக்கலில் மாட்டிக் கொள்வதோடு சான்றோர்களின் நிந்தனைகளையும் அவர்கள் அடைந்து வாய்ப்புகள் பறி போய் தவிப்பார்கள். அவர்கள் சட்டத்திற்கு புறம்பாக சேர்த்த பொருளையும் இழக்க நேரும்.

நேர்மையை காக்காமல் போனாலும் நாட்டின் சம நீதியை, நாட்டின் நேர்மையையும் ஒற்றுமையையும் சீர்குலைக்காமல் தருமத்தின் வழியினில் இனிமேலாகினும் நடந்தால்தான் தலைவர்கள் தப்பிப்பார்கள்.

மக்களுக்கு ஆற்ற வேண்டிய நற்பணிகள் ஏராளமாய் இருக்கும் இந்த சூழலில் தேச வளர்ச்சிக்கான பணிகளும் ஏராளமாய் இருக்கின்ற நிலையில் எதற்காக கலகத்தை உண்டு பண்ணுகின்ற அரசியல் தேவையற்றது.

ஆதலினாலே மக்களிடம் தயவு காட்டி மக்களுக்கு அளித்திட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதும், மக்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பணிகளிலும் கவனம் செலுத்தி மக்களின் வறுமையை போக்கும் விதத்தில் செயல்பட்டு நாட்டின் வறுமையை போக்கினாலே உலகம் உங்களை வாழ்த்தி வணங்கும். உலகமே இந்திய தேசத்தைக் கண்டு பெருமைப்படும்.

கலிகாலத்திலே ஆபத்தை விளைவிக்கும் மதக் கலகத்தை தூண்டும் விதமாக தப்பான முறையில் அரசியல் செய்தால் ஆட்சிக்கு அவப்பெயர் வருமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–